The above information can be viewed on the website of the Company at www.elnettechnologies.com and website of the stock exchange where the shares of the Company is listed i.e., www.bseindia.com.

For **Elnet Technologies Limited**
Sd/-
T. Joswa Johnson
Company Secretary

Date : 1st November, 2018
Place : Chennai

கடலூர், தஞ்சை, கரூர், நாகர்கோவிலிலும் எழுதலாம்

‘நீட்’ தேர்வு எழுத 4 புதிய மையங்கள்

மதியம் 2 மணிக்கு பரீட்சை தொடங்கும்

சென்னை, நவ.2:

தமிழ்நாட்டில் 2019-ம் ஆண்டு நீட் தேர்வுக்கு கூடுதலாக 4 மையங்கள் அமைக்கப்பட உள்ளன. காலையில் தேர்வு நடப்பதால் எளிதில் வர முடியவில்லை என்பதை கருத்தில் கொண்டு மதியம் 2 மணிக்கு தேர்வை தொடங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வு இந்த ஆண்டு மே 5-ந் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்வை எழுதுவதற்கு ஆன்லைன் மூலம் பதிவு செய்வது நேற்று தொடங்கியது. வரும் 30-ந் தேதி வரை பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 10 இடங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. தமிழகத்துக்கு அப்பாற்பட்டு கேரளா மற்றும் வட மாநிலங்களிலும் தமிழக மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கான மையம் ஒதுக்கீடு சய்யப்பட்டு இருந்ததால் மாணவர்கள் கடும் அவதி அடைந்தனர்.

இதனை கருத்தில் கொண்டு ஏற்கனவே 10 நகரங்களில் அமைக்கப்பட்டிருந்த தேர்வு மையங்கள் தவிர கூடுதலாக கடலூர், தஞ்சாவூர், கரூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

தேர்வு எழுதும் மாணவர்கள் தாங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையில் உள்ள நகரங்களையே தேர்வு செய்யுமாறும், தொலைதூர தேர்வு மையங்களை தேர்ந்தெடுக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து தேசிய நுழைவுத்தேர்வு முகமை (என்டிஏ) வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், குறிப்பிட்ட தேர்வு மையத்தில் குறைந்தபட்ச மாணவர்கள் பதிவு செய்யாவிட்டால் அருகில் உள்ள மற்றொரு தேர்வு மையத்திற்கு மாற்றப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் காலையில் தேர்வு நடத்தப்பட்டதற்கு பதிலாக 2019-ம் ஆண்டில் மதியம் 2 மணி முதல் 5 மணி வரை தேர்வு நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. தேர்வு மையங்கள் 2 மணி நேரத்திற்கு முன்பாகவே திறக்கப்படும். மதியம் 1.30 மணிக்குப் பிறகு தேர்வாளர்கள் உள்ளே அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கேள்வித்தாள்கள் தமிழ், ஹிந்தி, குஜராத்தி, தெலுங்கு, உருது, வங்காளி, ஆங்கிலம் உள்ளிட்ட 10 மொழிகளில் வழங்கப்படும். மேலும் பிராந்திய மொழி கேள்வித்தாள்களில் ஏதேனும் பிழைகள் இருந்தால் ஆங்கில கேள்வித்தாள்களில் குறிப்பிடப்பட்டு இருப்பதே இறுதியானதாக கருதப்படும். கடந்த முறை தமிழ் கேள்வித்தாளில் 49 பிழைகள் இருந்ததை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டு இருப்பதாக தெரிகிறது.

இயற்பியல், வேதியியல், உயிரியல் ஆகிய பாடங்களில் 180 கேள்விகள் கேட்கப்படும். ஒவ்வொரு சரியான விடைக்கும் 4 மதிப்பெண்கள் வழங்கப்படும். ஒவ்வொரு தவறான விடைக்கும் மொத்த மதிப்பெண்ணில் இருந்து ஒன்று குறைக்கப்படும்.

மேற்கண்ட தகவல்கள் என்டிஏ வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

சிஐஎஸ்எப் காவலர் மாயம்

சென்னை, நவ.2:

ஜெய்ப்பூரை சேர்ந்தவர் ரூபேஷ் (வயது 26). மத்திய தொழில் பாதுகாப்பு படையில் காவலராக உள்ள இவர், சென்னை உயர்நீதிமன்றத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுவருகிறார்.

புதுவண்ணாரப்பேட்டை துறைமுக குடியிருப்பில் தங்கியுள்ள ரூபேஷ், நேற்று முன்தினம் இரவு வழக்கம்போல் பணிக்கு சென்ற ரூபேஷ் திரும்பிவரவில்லை. இதனால், சந்தேகமடைந்த சக காவலர்கள் மத்திய தொழில் பாதுகாப்புபடை சப்-இன்ஸ்பெக்டர் ரமேஷ்-க்கு தகவல் அளிக்க, அவர் புதுவண்ணாரப்பேட்டை போலீசில் புகார் அளித்துள்ளார். போலீசார் வழக்குப்பதிந்து ரூபேஷை தேடிவருகின்றனர்.

நந்தனத்தில் உள்ள ஆவின் தலைமை அலுவலகத்தில் 10 புதிய பொருட்களை அமைச்சர் ராஜேந்திரபாலாஜி அறிமுகப்படுத்தினார்.

திருவள்ளூரில் சத்துணவு பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

சாலை மறியல் செய்த 180 ஊழியர்கள் கைது

திருவள்ளூர், நவ.2:

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கருப்பு ஆடை அணிந்து சத்துணவு ஊழியர்கள் திருவள்ளூர் தேசிய நெடுஞ்சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில், 157 பெண்கள் உள்பட 180 பேரை போலீஸார் கைது செய்தனர்.

சத்துணவு ஊழியர் சங்கத்தினர் தங்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், குடும்ப ஓய்வூதியமாக ரூ. 9 ஆயிரம் வழங்க வேண்டும். மேலும், ஓய்வூதியப் பணப்பயன்களாக சத்துணவு அமைப்பாளருக்கு ரூ. 5 லட்சமும், உதவியாளருக்கு ரூ. 3 லட்சமும் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும், இது தொடர்பாக சங்க நிர்வாகிகளை உடனே அரசு அழைத்துப் பேச வலியுறுத்தியும், கடந்த 4 நாள்களாக ஆட்சியர் அலுவலகம் முன் காத்திருப்புப் போராட்டத்திலும், பின்னர் 2 நாள்களாக மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், 7-ஆவது நாளான நேற்று கருப்பு ஆடை அணிந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்துக்கு மாவட்டத் தலைவர் சிவா தலைமை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் கலைமணி, மாவட்டச் செயலாளர் சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில், மாநிலச் செயலாளர் ஆண்டாள் உள்ளிட்டோர் கோரிக்கைகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தனர். அதைத் தொடர்ந்து, மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 157 பெண்கள் உள்பட 180 பேரை பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போலீஸார் கைது செய்து தனியார் அரங்கத்தில் அடைத்துவைத்தனர். இந்நிலையில், கைது செய்யப்பட்ட சத்துணவுப் பணியாளர்களுக்கு காவல் துறையினர் மதியம் 2 மணி வரையில் உணவு எதுவும் வழங்கவில்லையென கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த சத்துணவு ஊழியர்கள் போலீஸாரை கண்டித்து பட்டினிப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். அதையடுத்து, தாமதமாக உணவு அளித்த நிலையிலும், உண்ண மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர், மாலையில் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

அரிசி ஆலை உரிமையாளர்கள் ஏற்பாடு

உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்

செங்குன்றம், நவ.2:

செங்குன்றம் நெல், அரிசி மொத்த வியாபாரிகள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் சார்பில் உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் சங்க திருமண மண்டபத்தில் நடந்தது.

இந்த முகாமுக்கு சங்க தலைவர் டி.கோபி தலைமை தாங்கினார். துணை தலைவர் எம்.ஜெயபாலன், கவுரவ ஆலோசகர் மா.துரைசாமி, இணைச் செயலாளர்கள் ஞானராஜ் ஜோசப், நாகேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க செயலாளர் கே.என்.குணசேகர் வரவேற்றார். இதில் 40க்கும் மேற்பட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் கலந்து கொண்டனர். இந்த முகாமில் உணவு பாதுகாப்பு அதிகாரி பசுபதி உணவு பாதுகாப்பு லேட்டெஸ்ட் பற்றி விளக்கினார். உணவு பொருட்களில் அரிசி முதலிடம் என்பதால் தரம் மிக முக்கியம் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில தலைவர் டி.துளசிங்கம், செயலாளர் ஏ.சி.மோகன் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டனர். முடிவில் சங்க பொருளாளர் ஏ.லோகநாதன் நன்றி கூறினார்.

திருக்கைமீன் முள்ளால் குத்தி மீனவர் கொலை

ராமநாதபுரம், நவ.2:

ராமநாதபுரம் கீழக்கரையில் மனைவியை தாக்கியவர்களை தட்டிக்கேட்ட மீனவரை திருக்கை மீன் முள்ளால் குத்தி கொலை செய்த கொலையாளிகளை போலீசார் தேடி வருகின்றனர்.

கீழக்கரை கடற்கரை மீனவர் குப்பத்தை சேர்ந்த முத்துகுமார் மற்றும் நாகராஜ் ஆகியோர், நேற்றிரவு ஆனந்த் என்பவரது வீட்டின் முன்பாக நின்று குடிபோதையில் தகாத வார்த்தைகளால் பேசியுள்ளனர்.

இதையடுத்து அங்கு வந்த ஆனந்தின் மனைவி சத்யா, இருவரையும் அங்கிருந்து செல்லுமாறு கூறியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த இருவரும் சத்யாவை தாக்கியதாக கூறப்படுகிறது. அப்போது அங்கு வந்த ஆனந்த், இருவரையும் கண்டித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த போதை ஆசாமிகள் இருவரும் திருக்கை மீன் முல்லை எடுத்துவந்து ஆனந்தை குத்திக் கொலை செய்துள்ளனர். அவர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

BEFORE THE PRINCIPAL JUDGE CITY CIVIL COURT AT CHENNAI
C.M.P.No. 793 of 2018
in
C.M.P.No. 1474 of 2012
in
AS.Sr.No.47832 of 2012

A.P.Chelvam …Petr/Petr/Appellant
Vs
G.Kaveri & 21 Ors …Resps/ Resps/ Resps & Proposed Parties

NOTICE

To
1. Anandapadmanaban, H/o. A.P.Sumitra
2. Vijayalakshmi, D/o. A.P.Sumitra
3. Hemalatha, D/o. A.P.Sumitra
4. Nirmala, D/o. A.P.Sumitra
5. Devi, D/o. A.P.Sumitra
6. Sridhar, S/o. A.P.Sumitra
7. Jagadeesh, S/o. A.P.Sumitra

...Respondent 15 to 21.

All are Residing at; No.4, West Mada Street, Koyambedu, Chennai – 600 107.

Please take notice that in the above CMP. No. 793 of 2018, the Hon'ble Principal Judge City Civil Court, Chennai was pleased to serve notice to you through paper publication by order dated 29.10.2018, returnable by 29.11.2018.

You are hereby required to appear before the said Court at 10.15 AM on the next hearing date i.e. 29.11.2018 either in person or through a Pleader duly instructed to show cause your objections if any, failing which the above CMP will be heard and decided in your absence by setting you ex-parte.

M/s. **S. RAJENDRAKUMAR**
T.S. SURESH
COUNSEL FOR PETR/PETR/APPELLANT

ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within THREE Months thereafter, I **E.SELVA ARASAN,** S/o. K.Elangovan aged 22 years Permanently residing at No.64/34, Main Street, Nethaji Nagar, Tondiarpet, Chennai-600 081 intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Buildings, High court Campus, Chennai-104.
Those who have any valid Objections may Notify the same to the Bar Council within 10 days.

E.SELVA ARASAN

ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within THREE Months thereafter, I **S.SUNEETHA,** D/o. S.Subrahmanyam aged 39 years Permanently residing at No.761, 94 T.H. Street, 15 Sector, K.K.Nagar, Chennai-600 078 intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Buildings, High court Campus, Chennai-104.
Those who have any valid Objections may Notify the same to the Bar Council within 10 days.

S.SUNEETHA

ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within THREE Months thereafter, I **S.VAIDURIYA,** D/o. T.Sivakumar aged 23 years Permanently residing at No.3C, Bharathi Street, Thirupathi Nagar (Extn), Kolathur, Chennai-600 099 intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Buildings, High court Campus, Chennai-104.
Those who have any valid Objections may Notify the same to the Bar Council within 10 days.

S.VAIDURIYA

5th SCC
Before the Motor Accidents Claims Tribunal at Chennai.
M.C.O.P. No. 7597/15

மணிகண்டன் ...மனுதாரர்
எதிர்
திலகர் மற்றும் ஒருவர் ...எதிர் மனுதாரர்

பெறுநர்:
திலகர்,
No.32/2, தி.எச்.ரோடு,
திருவொற்றியூர், சென்னை-19.

மேற்படி தங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வாகன விபத்து வழக்கு எண். 7597/15 தங்களின் வருகைக்காக 28.11.18 அன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆகவே தாங்கள் வருகிற 28.11.2018 அன்று காலை 10.30 மணியளவில் மேற்படி நீதிமன்றம் முன்பு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறினால் வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலையாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

GEE YES & ASSOCIATES
ADVOCATES.

V Judge
BEFORE THE MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL AT CHENNAI
M.C.O.P. No. 6783 of 2016

Mrs. Chitra ...Petitioner
-Versus-
1. M.Barathidasan,
2. Reliance General Insurance Co. Ltd. ...Respondents

To,
M.Barathidasan,
S/o. E.Murugesan,
Old No.1/150, New No.1/130,
Main Road, Padur,
Chennai - 603 103.
... 1st Respondent

Please take notice that the above M.C.O.P. No. 6783 of 2016 is posted for your appearance on 20-12-2018 at about 10.30 A.M. Please be present before the above said Court on that day, failing which the matter will be decided in your absence.

K.MOHAN,
Counsel for Petitioner

சார்பு நீதிமன்றம் பூந்தமல்லி
M.C.O.P. No.176 OF 2018

மஞ்சு @ பத்மபிரியா ...மனுதாரர்
எதிர்
A. ஸ்ரீதர் மற்றும் ஒருவர் ...எதிர் மனுதாரர்கள்

பெறுநர்:
A. ஸ்ரீதர்,
எண்.25, அன்னை மேரி தெரு,
அனகாபுத்தூர்,
சென்னை-600 070.

மேற்படி வழக்கில் முதல் எதிர்மனுதாரரும் விபத்து ஏற்படுத்திய TN-32/T2038, Tipper Lorry-யின் உரிமையாளருமாகிய தங்கள் மீது மேற்படி மனுதாரர் நஷ்டஈடு கோரிய வழக்கில் வரும் 6.12.18 தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே அன்று காலை 10.15 மணியளவில் மேற்படி நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ (அ) வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களுக்கு ஆட்சேபனை ஏதேனும் இருந்தால் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தவறினால் தங்கள் மீது ஒருதலைப்பட்சமாகத் தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

திரு. இரா. அருணாசலம்,
திரு. அ.இளங்கோவன்,
திருமதி. க. சுஜாதா
மனுதாரரின் வழக்கறிஞர்கள்.

வட மற்றும் தென் சென்னை மாவட்ட சீட்டு நிதி வழக்குகள் தனி நடுவர் நீதிமன்றம்,
சிட்கோ எலக்ட்ரானிக் காம்ப்ளெக்ஸ், திரு.வி.க. இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், IIவது தளம், கிண்டி, சென்னை-600 032.

முன்னிலை: சீட்டு நடுவர்,
வட மற்றும் தென் சென்னை
சீட்டு நிதி வழக்குகள்
நடுவர் நீதிமன்றம்,
சென்னை-600 032.

வழக்கு எண். 157/2018

ஜெயப்பிரியா சிட்ஸ் (பி) லிட்,
T.Nagar ...வாதி
-எதிர்-
S.Yesodha & Others ...பிரதிவாதிகள்

R4, C.Sudharshan,
S/o. Chinnadurai,
No.2, 2nd Cross Street,
Mahalakshmi Nagar,
Poonamalle,
Chennai-600 056.

வாதி நிறுவனத்துக்கு தாங்கள் செலுத்த வேண்டிய நிலுவை பாக்கித்தொகை வட்டியுடன் ரூ.3,21,706/-ஐ திரும்பப் பெற இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதன் மீதான இறுதி விசாரணை 22.11.2018 அன்று காலை 11.00 மணிக்கு மேலே குறிப்பிடப்பட்ட நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற உள்ளது. நீங்கள் அன்று நேரில் ஆஜராகத் தவறினால் இந்த வழக்கு உங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக முடிவு செய்யப்படும் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

சீட்டு நடுவர்,
வட மற்றும் தென் சென்னை மாவட்டம்.

BEFORE THE 3rd ADDL. DISTRICT COURT AT POONAMALLEE
I.A. No. 173 of 2018
IN
O.S.No. 125 of 2017

M. YAKESH KRISHNAN …..Petitioner/Plaintiff
-Vs-
K.MADESHKUMAR & Others .....Respts/Defts & Prop. Parties

NOTICE

To,
M.ASHOKKUMAR ....9th Respondent / Prop. Party
S/o. M.Manokaran
No. 138, 2nd Cross street,
SRP Colony, Kolathur,
Chennai – 600 099.

Please take notice that in the above I.A. No. 173 of 2018, the Hon'ble Judge, 3rd Addl. District Court, Poonamallee was pleased to serve notice to you through paper publication by order dated 29.10.2018, returnable by 15.11.2018.

You are hereby required to appear before the said Court at 10.15 AM on the next hearing date i.e. 15.11.2018 either in person or through a Pleader duly instructed to show cause your objections if any, failing which the above I.A. will be heard and decided in your absence by setting you ex-parte.

M/s. **S. RAJENDRAKUMAR**
T.S. SURESH
COUNSEL FOR PETR/PLAINTIFF

ஆறாம் நீதிபதி
மோட்டார் வாகன நஷ்டஈடு வழங்கும் நீதிமன்றம் சென்னை
M.C.O.P.No.2854/2018

கலா ...மனுதாரர்
-Vs-
1.திரு.சொவுந்தர ரங்கன்
2.ஐசிஜசிஜ லம்பார்டு ஜெனரல் இன்சுரன்ஸ் கம்பெனி லிமிடெட் ...எதிர்மனுதாரர்கள்

பார்வை:
திரு.சொவுந்தர ரங்கன்
எண்.1611, டி.என்.எச்.பி. காலனி
54-வது சந்து,
வேளச்சேரி, சென்னை- 600 042.

பார்வையில் கண்ட தங்களுக்குச் சொந்தமான மோட்டார் வாகனம் ஏற்படுத்திய விபத்திற்கு நஷ்டஈடு கோரிய வழக்கானது 28.11.2018 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் தங்கள் வருகைக்காக போடப்பட்டுள்ளது. ஆகவே தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறினால் வழக்கு உங்களுக்கு எதிராக தீர்ப்பாகும் என்பதை அறியவும்.

M/s. YES AAR BEE ASSOCIATES
Advocates

மூன்றாம் நீதிபதி
மோட்டார் வாகன நஷ்டஈடு வழங்கும் நீதிமன்றம் சென்னை
மோ.வா.வி.கோ.ம.எண்.7131/2017

அபிநாஷ் @ அபிநேஷ் ...மனுதாரர்
-Vs-
1.திரு.டி.அரவிந்த்
2. பஜாஜ் அலியன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ...எதிர்மனுதாரர்கள்

பார்வை:1
திரு.டி. அரவிந்த்
எண்.10/19, கென்னடி சதுக்கம்
பெரம்பூர், சென்னை- 600 011.

பார்வையில் கண்ட தங்களுக்குச் சொந்தமான மோட்டார் வாகனம் ஏற்படுத்திய விபத்திற்கு நஷ்டஈடு கோரிய வழக்கானது 27.11.2018 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் தங்கள் வருகைக்காக போடப்பட்டுள்ளது. ஆகவே தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறினால் வழக்கு உங்களுக்கு எதிராக தீர்ப்பாகும் என்பதை அறியவும்.

M/s. YES AAR BEE ASSOCIATES
Advocates

மாண்பமை கோட்டாட்சியர் நீதிமன்றம் உட்கோட்டம் மதுராந்தகம், காஞ்சிபுரம்

ஏசுராஜன்
த/பெ சிவசங்கர்,
பனையூர் பெரியகுப்பம் கிராமம்,
பனையூர் அஞ்சல்,
செய்யூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம். ..மனுதாரர்
/எதிர்/
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
செய்யூர். ..எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் ஆகிய நான் எனது மாமா மகள் பவானி த/பெ தேசப்பன் என்பவரின் இறப்பு சான்றிதழ் வேண்டி கனம் கோட்டாச்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். எனது மாமா மகள் பவானி த/பெ தேசப்பன் என்பவர் கடந்த 20.03.1997 அன்று மேற்படி பனையூர்பெரியகுப்பம் கிராமம், செய்யூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் என்ற முகவரியில் இறந்துவிட்டார். எனது அறியாமையின் காரணத்தினால் நான் எனது மாமா மகளின் இறப்பை நான் அரசு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். ஆகவே எனது மாமா மகளின் இறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கனம் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் கனம் நீதிமன்றத்தின் வாயிலாக என்னை விசாரனை செய்து, எனது மாமா மகளின் இறப்பு சான்றிதழ் வழங்கப்படும் என்பதை அறியவும்.

இப்படிக்கு
ஏசுராஜன் த/பெ சிவசங்கர்,
பனையூர் பெரியகுப்பம் கிராமம்,
பனையூர் அஞ்சல்,
செய்யூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

மாண்பமை கோட்டாட்சியர் நீதிமன்றம் உட்கோட்டம் மதுராந்தகம், காஞ்சிபுரம்

எல்லப்பன்
த/பெ புத்துப்பட்டான்,
நெ.137, நைனார்குப்பம் கிராமம் மற்றும் அஞ்சல், செய்யூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம். ..மனுதாரர்
/எதிர்/
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
செய்யூர். ..எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் ஆகிய நான் எனது தாய் எல்லம்மாள் க/பெ புத்துப்பட்டான் என்பவரின் இறப்பு சான்றிதழ் வேண்டி கனம் கோட்டாச்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். எனது தாயார் எல்லம்மாள் க/பெ புத்துப்பட்டான் என்பவர் கடந்த 10.10.1990 அன்று மேற்படி நெ.137, நைனார்குப்பம் கிராமம், செய்யூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் என்ற முகவரியில் இறந்துவிட்டார். எனது அறியாமையின் காரணத்தினால் நான் எனது தாயாரின் இறப்பை நான் அரசு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். ஆகவே எனது தாயாரின் இறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கனம் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் கனம் நீதிமன்றத்தின் வாயிலாக என்னை விசாரனை செய்து, எனது தாயாரின் இறப்பு சான்றிதழ் வழங்கப்படும் என்பதை அறியவும்.

இப்படிக்கு
எல்லப்பன் த/பெ புத்துப்பட்டான்,
நெ.137, நைனார்குப்பம்
கிராமம் மற்றும் அஞ்சல்,
செய்யூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

மாண்பமை கோட்டாட்சியர் நீதிமன்றம் உட்கோட்டம் மதுராந்தகம், காஞ்சிபுரம்

மூர்த்தி
த/பெ நடராஜன்,
பனையூர் பெரியகுப்பம் கிராமம்,
பனையூர் அஞ்சல்,
செய்யூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம். ..மனுதாரர்
/எதிர்/
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
செய்யூர். ..எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் ஆகிய நான் எனது தந்தை நடராஜன் த/பெ ராஜமாணிக்கம் என்பவரின் இறப்பு சான்றிதழ் வேண்டி கனம் கோட்டாச்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை நடராஜன் த/பெ ராஜமாணிக்கம் என்பவர் கடந்த 05.06.1980 அன்று மேற்படி பனையூர்பெரியகுப்பம் கிராமம், செய்யூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் என்ற முகவரியில் இறந்துவிட்டார். எனது அறியாமையின் காரணத்தினால் நான் எனது தந்தையின் இறப்பை நான் அரசு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். ஆகவே எனது தந்தையின் இறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கனம் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் கனம் நீதிமன்றத்தின் வாயிலாக என்னை விசாரனை செய்து, எனது தந்தையின் இறப்பு சான்றிதழ் வழங்கப்படும் என்பதை அறியவும்.

இப்படிக்கு
மூர்த்தி த/பெ நடராஜன்,
பனையூர் பெரியகுப்பம் கிராமம்,
பனையூர் அஞ்சல்,
செய்யூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

மாண்பமை கோட்டாட்சியர் நீதிமன்றம் உட்கோட்டம் மதுராந்தகம், காஞ்சிபுரம்

மூர்த்தி
த/பெ நடராஜன்,
பனையூர் பெரியகுப்பம் கிராமம்,
பனையூர் அஞ்சல்,
செய்யூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம். ..மனுதாரர்
/எதிர்/
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
செய்யூர். ..எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் ஆகிய நான் எனது மகள் பிரியதர்ஷினி த/பெ மூர்த்தி என்பவரின் பிறப்பு சான்றிதழ் வேண்டி கனம் கோட்டாச்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். எனது மகள் பிரியதர்ஷினி த/பெ மூர்த்தி என்பவர் கடந்த 28.09.1995 அன்று மேற்படி பனையூர்பெரியகுப்பம் கிராமம், செய்யூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் என்ற முகவரியில் பிறந்தார். எனது அறியாமையின் காரணத்தினால் நான் எனது மகளின் பிறப்பை நான் அரசு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். ஆகவே எனது மகளின் பிறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கனம் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் கனம் நீதிமன்றத்தின் வாயிலாக என்னை விசாரனை செய்து, எனது மகளின் பிறப்பு சான்றிதழ் வழங்கப்படும் என்பதை அறியவும்.

இப்படிக்கு
மூர்த்தி த/பெ நடராஜன்,
பனையூர் பெரியகுப்பம் கிராமம்,
பனையூர் அஞ்சல்,
செய்யூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

எல்நெட் டெக்னாலஜீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: டி.எஸ்.140, பிளாக் 2 மற்றும் 9, ராஜீவ் காந்தி சாலை, தரமணி, சென்னை - 600 113.
தொலைபேசி: 044-2254 1098 / 1337
தொலை நகல்: 044-2254 1955.
மின்னஞ்சல்: elnet@md4.vsnl.net.in
இணைய தளம்: www.elnettechnologies.com
CIN:L72300TN1990PLC019459

அறிவிப்பு

இதர விஷயங்களுடன் சேர்த்து 30.09.2018 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் பெறுவதற்காக **எல்நெட் டெக்னாலஜீஸ் லிமிடெட்** கம்பெனியின் 168-வது இயக்குனர்கள் குழு கூட்டம் **09.11.2018, வெள்ளிக்கிழமையன்று** நடைபெறும் என்பது 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில், 29-வது விதிமுறை மற்றும் 47வது விதிமுறையின் கீழ் இதன் மூலம் **அறிவிக்கப்படுகிறது.**

மேற்குறிப்பிடப்பட்ட தகவலை கம்பெனியின் www.elnettechnologies.com என்ற இணைய தளத்திலும், கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்படும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் www.bseindia.com என்ற இணைய தளத்திலும் காணலாம்.

எல்நெட் டெக்னாலஜீஸ் லிமிடெடுக்காக
ஒ-ம்/-
தேதி: 01.11.2018 — **T.ஜோஸ்வா ஜான்சன்**
இடம்: சென்னை — கம்பெனி செயலாளர்

பொது அறிவிப்பு

எங்களது கட்சிக்காரர் திருமதி. V.கிருஷ்ணவேணி க/பெ.வைத்தியலிங்கம், இந்து, வயது 70, விலாசம் எண்.1/81, திருப்பூர் குமரன் தெரு, நசரத்பேட்டை, சென்னை- 600 123 தரும் அறிவிப்பு என்னவென்றால் மேற்படி திருமதி. கிருஷ்ணவேணி அவர்களுக்கு அவரது பெயரில் சொந்தமாக சர்வே எண்.10 நசரத்பேட்டை கிராமம், பூவிருந்தவல்லி வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் 4004 சதுர அடி மனையும் வீடும் உள்ளதாகவும் மேற்படி மனையை திருமதி பாக்கியம்மாள் என்பவரிடம் கிரையம் பெற்று பத்திரப்பதிவு எண்.1097/1962 பூவிருந்தவல்லி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு பெற்று சுவாதீனம் பெற்றதாக தெரிவிக்கிறார். மேற்படி பத்திரத்தை கடந்த 30.10.2018 அன்று காலை சுமார் 11 மணியளவில் நசரத்பேட்டை பஜாரில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு நகல் எடுக்க சென்ற போது தொலைந்து விட்டதாகவும் பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கின்றார். இதுபற்றி புகார் அளிக்க இருப்பதாகவும், மேற்படி அசல் ஆவணத்தை யாரேனும் தவறாக பயன்படுத்தினால் அது எங்களது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது என்பதையும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கின்றார்.

K. ஹரிகுமார்,
B. தினேஷ்குமார்,
வழக்கறிஞர்கள், பூவிருந்தவல்லி.

சுகால் & தமானி ஷேர் புரோக்கர்ஸ் லிமிடெட்
SUGAL & DAMANI
CIN:L65991TN1993PLC028228

பதிவு அலுவலகம்:
‘சிட்டி சென்டர் பிளாசா’ (முதல் தளம்), எண். 7, அண்ணாசாலை, சென்னை - 600 002.

அறிவிப்பு

30.09.2018 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பதிவுக்கு எடுத்துக்கொள்வதற்காக கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் 14.11.2018, புதன்கிழமை அன்று பிற்பகல் 3.00 மணியளவில் **‘சியாட் ஹவுஸ்’, 4-வது தளம், 961, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-600 084** என்ற முகவரியில் நடைபெறும் என்பது 2015-ம் வருடத்திய செக்யூரிட்டீஸ் அண்டு எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 29-வது விதிமுறை மற்றும் 47-வது விதிமுறையின் கீழ் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பானது கம்பெனியின் **www.sugalshare.com** என்ற இணைய தளத்திலும், மேலும் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்படும் பங்குச்சந்தை நிறுவனத்தின் **www.bseindia.com** (BSE லிமிடெட்) என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
சுகால் & தமானி
ஷேர் புரோக்கர்ஸ் லிமிடெடுக்காக
ஒ-ம்/-
இடம் : சென்னை — **ராதிகா மகேஷ்வரி**
தேதி : 02.11.2018 — **கம்பெனி செயலாளர்**

ஹேமாங் ரிசோர்சஸ் லிமிடெட்
CIN: L65922TN1993PLC101885

பதிவு அலுவலகம்: மனை எண்.4, 6-வது அவென்யூ, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை, தமிழ்நாடு-600 031.
போன்: 044-4559 0053, 044-2836 2127
பேக்ஸ்: 044-4559 0057
இ-மெயில்: cs@bhatiacoalindia.com
இணையதளம்:
http://bhatiacoalindia.com/BIIL/index.htm

குழு கூட்டம் பற்றிய அறிவிப்பு

2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில், 47-வது விதிமுறையின் கீழ் இதர விஷயங்களுடன் சேர்த்து 30.09.2018 அன்றுடன் முடிந்த இரண்டாவது காலாண்டுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் பெறுவதற்காக கம்பெனியின் இயக்குனர்கள் குழுக்கூட்டம் **13.11.2018, செவ்வாய்கிழமை** அன்று **‘பிசிசி ஹவுஸ்’, 8/5, மனோரமாகஞ்ச், நவ்ரட்டன் பாக் மெயின் ரோடு, இந்தூர்-452 001** என்ற முகவரியில் நடைபெறும் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஹேமாங் ரிசோர்சஸ் லிமிடெடுக்காக
ஒ-ம்/-
இடம்: சென்னை — **அங்குர் பாரிக்**
தேதி: 02.11.2018 — **(கம்பெனி செயலாளர்)**

மாலைச்சுடரில் விளம்பரம் செய்து பயன்பெறுங்கள்

மாலைச்சுடர்
உங்கள் வீடு தேடி
வர அணுகவும்
Phone:
9176699819